உ

சிவமயம்

சுன்னாகம் - மயிலணி

## திருக்குடவாயில்

## ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோவில்

# ரதோத்சவ மலர்



சுக்ல௵ வைகாசி௴ 5௳

1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60.040

வாழ்த்துகிறோம்!

# Jaffna Technical Centre

# RADIO
# TV
# DECK

## Electrical Goods, Repairs
## &
## Antenna Fitting
## Booster Repairings

**Conducted by:**

# Jaffna Technical Centre

Dr. Subramaniam Road :: CHUNNAKAM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



சுன்னுகம் - மயிலணி

# ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோவில்

# ரதோத்சவ மலர்

குடவாயிற் கோட்டம்

மயிலணி — சுன்னுகம்

சுக்லஹு வைகாசிமீ 5உ வெள்ளி


1989

வெளியீடு — 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியாய் யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

*சுன்னாகம் மயிலணிப் பதியில் குடவாயிற் கோட்டத்தில் வீற்றிருக்கும் விசாலாட்சியம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாதப் பெருமான் திருவருளால் நிறைவெய்திய புதிய தேரில் எம் பெருமான் உலாவரும் நன்னாளில் இம்மலரை எம்மையாளுடைய நாயகரின் திருப்பாத கமலங்களில் சமர்ப்பிக்கின்றோம்.*

*இம்மலரில் தேன்சிந்தும் பல இதழ்கள் உள்ளன. ஆலய வரலாறு, தேர்ச் சிறப்பு, விஸ்வநாதர் திருவூஞ்சல், விசாலாட்சியம்மை பதிகம், துதிப் பாடல்கள் என்பன மலரை அணி செய்கின்றன.*

*இம் மலருக்கு மாவை ஆதீனகர்த்தர் மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களின் ஆசியுரை மணிமகுடமாகத் திகழ்கிறது.*

*இம்மலரை மெய்யடியார்கள் யாவரும் தவறாது வாங்கிப் படித்துப் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

*''மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்''*

**மலர் வெளியீட்டுக் குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவை ஆதீனகர்த்தரும் பிரதம சிவாசாரியருமாகிய
## மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களின்
# வாழ்த்துரை

ஒருகால் சிவபெருமான் முப்புரங்களையும் அழிப்பதற்குப் புறப்பட்டபொழுது பூமியைத் தேராகவும், சூரிய சந்திரர்களை அதன் சக்கரங்களாகவும், நான்கு வேதங்களைத் தேர் இழுக்கும் குதிரைகளாகவும் அமைத்து அதில் எழுந்தருளிச் சென்றார் என்பது புராணம். இது உலகம் யாவும் தன்னுள் அடக்கம் என்பதையும் குறிக்கும். பிரபஞ்சம் முழுவதும் பீடசக்தியாகவும், அதிலுள்ள அண்ட சராசரங்கள் இறைவனது உருவத் திருமேனியாகவும், அவற்றுள் மறைந்திருப்பதுவே சிவசொருபம் என்ற நினைவுடனும் தேரிலே இறைவனை நாம் தரிசித்துப் பயன் பெறுகிறோம்.

பலவகைப்பட்ட தேர்கள் இப்போது பற்பல வீரர்களால் ஆக்கப்படுகின்றன. தேர்ச் சிற்பங்களிலும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. தெய்வீகத் திருவுருவங்களுக்குப் பதிலாக, மானிட உருவங்களும் செதுக்கப்படுகின்றன. உளியும் தட்டுப்பொல்லும் காவுகிறவன் எல்லாம் தேர்த் தச்சனாகத் தன்னை ஆக்கிக்கொள்வதால்தான் நாட்டில் தீங்குகளும் துயரங்களும் உருவாகின்றன.

தக்ஷப்யோ ரதகாரேப்யச்சவோ நம :
ரதேப்யோ ரதபதிப்யச்சவோ நமோ நம :

என்ற வேத வாக்கியங்கள் பிரகாரம் பிரபஞ்சத் தேரை அமைக்கும் சிற்பாச்சாரியாகவுள்ள சிவனுக்கு வணக்கம். பற்பல உருவ வேதம் அமைக்கும் சிற்பாச்சார ரூபமான சிவனுக்கு வணக்கம். பிரபஞ்சத் தேரில் ஆரோகணித்து மறைந்துநிற்கும் தேர்த் தலைவனான இறைவனுக்கு வணக்கம்.

இப்படியான சிறப்புவாய்ந்த பொருள் கொண்டதும் இன்னும் பற்பல விருத்தாந்தங்களை உள்ளடக்கியதுமான தேர்த் திருவிழாவைத் தரிசிப்பதற்கு நாம் எத்தனையோ சிவபுண்ணியம் செய்திருத்தல் வேண்டும்.

தேர்களின் அமைப்பானது அதன் முழு ஆகிருதியும் சுடர்விட்டுப் பிரகாசித்து எரியும் அக்னியின் அமைவுக்கு ஒத்திருப்பதையும் நாம் அவதானிக்கலாம். இதனையே "சாற்றியிடும் அக்னியிலே சங்காரம்" எனக் கூறப்பட்டுள்ளது. சங்காரத்தைக் குறிப்பதுவே தேர்த்திருவிழா. இறைவன் திருக்கரத்திலேகூட தேர் அமைவிலான அக்னியும் இருக்கிறது.

ஆனந்தத் திருநடனம் புரிந்து ஆன்மாக்களை ஈடேற்றத் திருவருள் பாலித்திருக்கும் மயிலணி ஸ்ரீ விசாலாக்ஷி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமான் அழகிய தோர் தேரில் அமர்ந்து உலாவந்து ஞாலமெல்லாம் அப்பெருமானது திருவருள் நிரம்பச் சொரிந்து உலகம் உய்யும் பொருட்டு அவ் ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சோ. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் பல சிரமங்களுடே வேண்டியவற்றைச் செய்துள்ளார். தேர் உபயகாரர்களும் மற்றும் கோவிலோடு சம்பந்தப்பட்ட பல பெரியோர்களும் இதற்குத் துணைநின்றுள்ளார்கள்.

யார் யார் எல்லாம் இதற்குத் துணை செய்தார்களோ அவர்கட்கும் அவர்களைச் சார்ந்தோர்க்கும் அடியார் பெருமக்களுக்கும் எல்லாம்வல்ல மயிலணி ஸ்ரீ விஸ்வநாதப் பெருமானது திருவருள் கிடைப்பதாக.

**மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்**

மாவையாதினம்,
மாவிட்டபுரம்,
5–5–89.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருத்தல வரலாறு

சிவஸ்ரீ சோ. சோமாஸ்கந்தக் குருக்கள்

( ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாசாரியாரும் )

சுன்னுகம் மயிலணி குடவாயிற் கோட்டத்தில் எழுந்தருளியிருந்து வேண்டுவார் வேண்டுவதை யீந்து அருள்புரியும் ஸ்ரீ விஸ்வநாதப் பெருமானுடைய திருத்தல மாண்பினையும் சிறப்புகளையும் ஈண்டு சிறிது நோக்குவாம்.

**தக்ஷிண கைலாசம் :**

மிகப் பழையகாலத்தில் ஒரு சமயம், உலகினைத் தாங்குபவனும் திருமால் பள்ளி கொள்ளும் பாயலாக அமைந்தவனுமாகிய ஆதிசேடனுக்கும் உலகின் உயிர்களுக்கெல்லாம் உயிரூட்டுபவனுகிய வாயுதேவனுக்கு மிடையில் யார் அதிக பலசாலி என்பதில் வாக்குவாதம் ஏற்பட்டது. இருவரும் தாம் தாமே மிகுந்த பலசாலி என்று வாதிட்டனர். ஈற்றில் மஹாமேருமலைச் சிகரத்தை வாயுதேவன் பறித்து வீசவேண்டும் என்றும் அவ்வாறு அச்சிகரத்தைப் பெயர்க்கவிடாது ஆதிசேஷன் தன் வலிமையினுல் தடுக்க வேண்டுமென்றும் இப் போட்டியில் யார் வெற்றி பெறுகிருரோ அவரே மிக்க பலசாலி என்றும் முடிவாகியது. ஆதிசேஷன் தனது ஆயிரம் தலைகளை யுடைய படத்தை விரித்து மஹாமேருவையும் அதன் சிகரங்களையும் அசைக்கமுடியாதவாறு பாதுகாத்தான். வாயு தேவனும் தனது பயங்கர வலிமையுடன் சுழன்றடித்து மேருச் சிகரத்தைப் பெயர்ப்பதில் கண்ணுக இருந்தான். இருவருக்குமிடையில் கடும் போட்டி இடம்பெற்றது. காலம் சென்றுகொண்டிருந்தது. ஆதிசேஷன் சிறிது சிறிதாக தளர்வடைந்து கொண்டிருந்தான். வாயுதேவனே மிக உக்கிரமாக வீசிக்கொண்டிருந்தான். இறுதியில் ஆதிசேஷனின் பிடியை முற்ருக நீக்கி மேருச் சிகரத்தை வலிவோடும் பறித்துத் தென்கடலுள் வீசினுன். தென்கடலுள் இலங்கித் தோன்றியபடியால் தக்ஷிண கைலாசமென்றும் இலங்கை என்றும் அழைக்கப்படுகிறது.

வாயுதேவனுல் வீசப்பட்ட அச்சிகரம் தெற்கே அடிப்பாகமும் வடக்கே முடிப்பாகமுமாக வீழ்ந்தது. இலங்கையின் வரைபடத்தை உற்று நோக்குவோர் இதனை எளிதில் உணரலாம். மலைகளின் அடிப்பாகத்தைவிட முடிப்பாகத்திற்கே என்றும் தெய்வீகத்தன்மையும் பெருமையும் சிறப்பும் அதிகம் உண்டு. இலங்கையிலும் முடிப்பகுதியாகிய வடபகுதியே தெய்வீகத்தன்மையும் பெருமையும் பொருந்தியதாக அமைந்தது. புனிதமான முடிப்பாகமாகிய வடபகுதியின் எல்லையாக ஞானசம்பந்தராலும் சுந்தரமூர்த்திகளாலும் பாடி வணங்கப்பெற்ற திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்பன அமைந்துள்ளன.

**சுன்னுகம் :**

தக்ஷிணகைலாசத்தின் மிக முக்கிய பகுதி சுன்னுகம் என்ற இடமாகும். சுல் + நாகம் = சுன்னுகம். சுல் என்பது வெள்ளி. நாகம் என்பது மலை. சுன்னுகம், கயிலைமலை, ரஜதகிரி, ரஜதாசலம் என்பன ஒரே கருத்துடைய பெயர்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப்பிரமணியர் பூசித்த வரலாறு :

சுன்னகம் என்ற இடம் பழையகாலத்தில் சிறு குன்றாக அமைந்திருந்தது. ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் சூரசம்ஹாரம் முடித்துத் தேவர் சிறைமீட்டு மயில்வாகனத்தில் ஆரோகணித்து வருகையில் சுன்னகப் பதியைக் கண்ணுற்றதும் திருக்கைலையில் இறைவியுடன் எம் பெருமான் வீற்றிருக்கும் திருக்கோலம் மனதில் தோன்ற மயில் வாகனத்தினின்றும் இறங்கி அவ்விடத்தில் தேவகம்மியனைக் கொண்டு ஒரு ஆலயம் அமைப்பித்து தந்தையின் சிவலிங்க வடிவத்தைத் தாபித்துச் சிவாகம விதிப்படி சிவ பூஜை செய்தருளினார். அசுரர்களைக் கொன்றதனாலேற்பட்ட பாபம் சிவபூஜையினால் நீங்கப்பெற்றது. முன்னர் தாரகனை அழித்தபின் சேய்ஞலூர் என வழங்கப்பெறும் குமரபுரியிலும் பின்னர் திருச்செந்தூரிலும் முருகப்பெருமான் சிவபூஜை செய்தமை கந்தபுராணத்தில் காட்டப்பட்டுள்ளது. இராவண சம்ஹாரம் முடிந்து மீளுகையில் இராமேஸ்வரத்தில் இராமபிரான் சிவபூஜை செய்தமையும் வில்வலன் வாதாவி ஆகியோரை அழித்தபின் அகஸ்தியமுனிவர் கொங்குநாட்டில் சிவபூஜை செய்தமையும் ஈண்டு நினைவுகூரப்படற்பாலன.

முருகப்பிரானின் பூசனையினால் மகிழ்ந்த சிவபெருமான் தமது ஆனந்த நடனக் காட்சியைக் காட்டியருளினார். வீரவாகு தேவரும் இலக்கத்தெட்டு வீரர்களும் கணநாதர்களும் விஷ்ணு, பிரம்மா, இந்திரன் முதலாகிய தேவர்களும் இறைவனின் திருநடனக் காட்சியைக் கண்டு வணங்கி இறும்பூதெய்தி நின்றனர். அச்சமயத்தில் குமரப் பெருமானின் வாகனமாகிய மயிலானது ஆனந்த மேலீட்டினால் தனது தோகையை விரித்தாடியபடியே சிவபெருமானையும் சிவகுமாரனையும் வலம்வந்து வணங்கி நின்றது. முருகப்பெருமான் மகிழ்ந்து மயிலை நோக்கி உன் பெயரால் இத்தலம் மயிலணி என வழங்குவதாக என ஆசீர்வதித்தார். இக்காரணத்தினால் இவ்விடம் இன்றும் மயிலணி என்றே வழங்கப்படுகின்றது.

ஆன்மார்த்தமாகச் செய்யப்படும் சிவபூஜையிலும் யாகங்களிலும் மேற்குத் துவாரத்திலேயே நித்தியத் துவார பூஜை செய்யப்படவேண்டும் என வேதசிவாகமங்களில் விதிக்கப்பட்டுள்ளது. இறைவனின் சத்யோஜாத முகத்தை அபிமுகமாகக் கொண்டு துவாரபூஜை செய்து இறைவனை வழிபடுவோர் போக மோக்ஷங்களை இலகுவில் பெறுவார்கள். முருகப்பெருமான் சிவபூஜை செய்து வழிபாடாற்றிய இத்திருத்தலமும் மேற்கு நோக்கிய சன்னிதியாக அமைந்துள்ளமை மேற்கூறிய ஆகம விதிகளுக்கு விளக்கமாக இருக்கின்றது. மேலும் சம்பாதி—சடாயு என்னும் புள்ளரசர்களாலும் வேதங்களினாலும் முருகவேளினாலும் பூசிக்கப்பெற்ற தலம் புள்ளிருக்கு வேளூர் (புள் + இருக்கு + வேள்). இத்தலம் இன்று வைத்தீஸ்வரன் கோவில் என வழங்கப்படுகின்றது. இக் கோவிலும் மேற்கு வாயிலாகவே அமைந்துள்ளமை நோக்கற்பாலது.

## இராவணன் வழிபாடு :

இலங்கேஸ்வரனான இராவணன் திருக்கைலையை எடுக்கச் சென்று அதனுள் நசுங்கி வருந்திப் பின் வாகீசமுனிவரால் வழிப்படுத்தப்பட்டு சாமகானம் பாடி உய்வடைந்தான். பின்னர் தான் ஆணவத்தினால் செய்த தவறை உணர்ந்து தான்செய்த சிவாபராதம் நீங்குவதற்காக இத்திருத்தலத்திற்கு வந்து பிரதோஷவிரதமிருந்து சிவ பூஜை செய்து வந்தான். தொடர்ந்து அவனால் அனுட்டிக்கப்பெற்ற விரதபூஜைகளினால் மகிழ்வடைந்த இறைவன் அவனுக்குக் காட்சி கொடுத்துத் தமது திருநடனத்தைக் காட்டியருளினார். மிகுந்த சிவபக்தனும் இசைக்கலை விற்பன்னனுமாகிய இராவணன் சிவதாண்டவக் காட்சியைக் கண்ணுற்றுப் பெறற்கரும் பேறு பெற்றவனாகி ஆனந்த மேலீட்டினால் சிவதாண்டவஸ்தோத்ரம் எனப்படும் தாண்டவத்திற்குரிய சந்தத்திலமைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனவும் சொற்கட்டும் பொருளாளமும் கொண்டனவுமாகிய வடமொழிப் பாடல்களைப் பாடித் துதித்தான். அவனுடைய பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த இறைவன் அவனுக்கு தேர், யானை, குதிரை ஆகிய சேனைகளையும் நிலையான செல்வங்களையும் கொடுத்தருளினார். இராவணன் சிவதாண்டவ ஸ்தோத்திரத்தின் இறுதியில் இத்தோத்திரத்தை எவர் பிரதோஷகாலத்தில் பூஜைசமயத்தில் சிவசந்நிதியில் படித்து வணங்குகிறாரோ அவருக்கு யானை, குதிரை, தேர் முதலானவற்றையும் நிலையான சிறந்த செல்வங்களையும் சிவபெருமான் கொடுத்தருளுவார் என்று கூறியுள்ளமையே இதற்கு முக்கிய சான்றாகும்.

மேலும் கருவறையில் சிவலிங்கப் பெருமானுடன் நடராஜமூர்த்தி உமையம்மையோடும் விநாயகர், சுப்பிரமணியர் ஆகியவர்களோடும் ஒன்றாயமர்ந்து காட்சி கொடுக்கும் திருத்தலம் இது ஒன்றேயாகும். அவ்வமைப்பினை வேறு எவ்விடத்தும் காணமுடியாது. இக் கோவிலில் ஸ்தலவிருக்ஷமாக வில்வமரம் அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். கோவில் தீர்த்தம் சிவகங்கை என வழங்கப்படுகிறது.

### புனர் நிர்மாணம் :

இத்துணைச் சிறப்பு வாய்ந்த திருத்தலமானது காலவெள்ளத்தினாலும் வேற்று நாட்டு அந்நிய மதத்தவர்களின் ஆட்சியதிகாரங்களினாலும் சிதைவடைந்து போக, இற்றைக்கு ஏறக்குறைய நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் எமது முன்னோரும் குமரப் பெருமானின் திருநாமம் பூண்டவரும் கௌணியர் குலதிலகருமாகிய சிவஸ்ரீ மு. கார்த்திகேயக் குருக்கள் அவர்கள் பழைமையும் பெருமையும் வாய்ந்த அந்த இடத்தைக் கிரயம் செய்து அதில் ஆலயமமைத்து உத்சவங்கள் பூஜை வழிபாடுகளை வேதசிவாகம முறை வழுவாது நடாத்தி வந்தார். அவரைத் தொடர்ந்து அவரது வழித்தோன்றல்களாகிய நாம் அதனைச் சிறப்புற நடாத்தி வருகின்றோம்.

### பரிவாரமூர்த்திகளும் பூஜா காலங்களும் :

இக் கோவில் பரிவார மூர்த்திகளாக விநாயகர், ஷண்முகர், பைரவர், சனீஸ்வரன், நவக்கிரகம், சந்தான கோபாலர், சண்டேஸ்வரர் ஆகியவர்களுக்கு தனித்தனி கோவில்கள் உண்டு. மேலும் சமயாசாரியர் நால்வருக்கும் பஞ்சலிங்கங்களுக்கும் திருமால், இலக்குமி ஆகிய மூர்த்திகளுக்கும் தனித்தனி கோவில்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளன. சிவனின் கர்ப்பக்கிருக கோஷ்டங்களில் துர்க்கை, பிரம்மா, லிங்கோத்பவர், தக்ஷிணாமூர்த்தி, நிர்த்த கணபதி ஆகியவர்களும் அம்பாள் ஆலய கோஷ்டங்களில் பிராம்மி, மாகேஸ்வரி, வைஷ்ணவி ஆகியவர்களும் அமைந்துள்ளனர். கொடிமரத்தின் முன் அமைந்துள்ள ஆதார கணபதியின் திருவுருவும், சிற்பச்சிறப்பும் கண்கொள்ளாக் காட்சியாகும். ஸ்தம்ப மண்டபத்தில் அதிகார நந்தியும் பலிபீடமும் மஹாமண்டபத்தில் தர்சன நந்தியும் பலிபீடமும் அமைந்துள்ளன.

உத்சவ மூர்த்திகளாக விசாலாட்சி சமேத விஸ்வநாதரும், மஹாசக்தியும், பிரியாவிடை நாயகரும் (பிரதோஷமூர்த்தி), விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோரும் காட்சி தருகின்றனர். இங்கு ஒவ்வொருநாளும் நான்கு காலப் பூஜைகள் நடைபெறுகின்றன.

### கோவிலில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள் :

வைகாசி விசாகத்தை இறுதி நாளாகக் கொண்டு 10 நாள் மஹோத்சவம் நடைபெறுகிறது. ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழாவும் 10ஆம் நாள் தீர்த்தவிழாவும் சிறப்பாக நடைபெறும். புரட்டாதி மாதத்தில் மஹாநவமியை இறுதியாகக் கொண்டு பத்துத் தினங்கள் ஸ்ரீவிசாலாட்சி அம்பாளுக்கு விசேஷ பூஜை, லக்ஷார்ச்சனை, ஹோமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன நடைபெறும். மார்கழியில் திருவெம்பாவை உத்சவத்தில் 9ஆம் நாள் தேர் உத்சவமும் 10ஆம் நாள் ஆர்த்ரா தர்சனமும் மிக விமரிசையாகக் கொண்டாடப்படும். மஹாசிவராத்திரியன்று நான்கு யாமங்களிலும் பூஜை வழிபாடுகளும் லிங்கோத்பவ காலத்தில் விசஷே பூஜை உத்சவம் என்பனவும் நடைபெறும். இவை தவிர ஒவ்வொரு மாதத்திலும் வரும் எல்லா விசேஷ தினங்களுக்கும் அபிஷேகம், பூஜை, உத்சவம் ஆகியன சிறப்பாக நடைபெறும். திருக்கார்த்திகையன்று ஷண்முகப்பெருமானுக்கு விசேஷ ஆராதனைகளும் உத்சவமும் சிறப்பாக நடைபெறும்.

**பாடல் புனைந்து வழிபாடு செய்தோர் :**

இத்தலத்தில் அமர்ந்துள்ள முருகப்பெருமானை அருணகிரிநாதர் வணங்கித் திருப் புகழ் பாடித் துதித்துள்ளார். அப்பாடல் வருமாறு :

**புவியதனிற் ப்ரபுவான**
**புகலியில்வித் தகர்போல**
**அமிர்தகவித் தொடைபாட**
**அடிமைதனக் கருள்வாயே**
**சமரிலெதிர்த் தசுர்மாளத்**
**தனியயில்விட் டருள்வோனே**
**நமசிவயப் பொருளானே**
**ரஜதகிரிப் பெருமாளே.**

இவ்வூரில் வாழ்ந்த முருகேச பண்டிதர் என்பவர் இக்கோவிலிலுள்ள விசாலாட்சி யம்மையைத் துதித்துப் பதிகம் பாடிப் போற்றினர். சுன்னுகம் பிராசீன பாடசாலைத் தலைமையாசிரியரும் சம்ஸ்கிருத வித்வானுமாகிய பிரம்மஸ்ரீ. பி. வி. சிதம்பர சாஸ் திரிகள் நடராஜஸ்த்வரத்னமாலை, விஸ்வநாதாஷ்டகம், விசாலாக்ஷி பஞ்சரத்னம் ஆகிய வடமொழியிலமைந்த ஸ்தோத்திரங்களால் புகழ்ந்து போற்றியுள்ளார். இன்னும் பெயர் குறிப்பிடப்படாத பல அடியார்களாற் பாடப்பெற்ற தனிப்பாடல்களுமுண்டு.

இத்துணை பழைமையும் சிறப்பும் வாய்ந்த இத்திருத்தலத்தில் முன்னர் அமைக்கப் பெற்ற அழகிய தேரானது மேற்பகுதி வேலைகள் நிறைவு செய்யப்படாதிருந்தது. அதனைச் செய்து முடிக்க வேண்டுமென யான் முயன்ற பொழுது எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தும் பொருளுதவி புரிந்தும் இப்பணி நிறைவுறத் துணைநின்ற அடியார் பெருமக்கள் அனைவருக்கும் இகபரப் பேறுகள் யாவும் கிடைக்க வேண்டுமென எனது ஆன்ம நாயகராகிய ஸ்ரீ நடராஜப் பெருமானை வாழ்த்தி வேண்டி இச்சிறு மலரை அப்பெருமானின் திருவடிகளில் காணிக்கையாகச் செலுத்தி விடைபெறுகின்றேன்.

**'' அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமையெல் லாமும்**
**குன்றே யனையாய் என்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ**
**இன்றோ ரிடையூ றெனக்குண்டோ எண்டோள் முக்க ணெம்மானே**
**நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே. ''**

லோகாஸ்மஸ்தாஸ் சுகினோபவந்து
ஓம் சாந்திஸ் சாந்திஸ் சாந்தி:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# தேர்த் திருவிழா மகிமை

தேர்த்திருவிழா ! ஊர் எல்லாம் ஒன்று திரண்டு கோவிலிற்கூடி இறைவழிபாடு செய்து, இறைவனைத் தேரில் ஏற்றி, வீதிவலம் வருகையில் ... ... ஆஹா ! எவ்வளவு ஆனந்தம். தேரில் சுவாமியைத் தரிசனம் செய்வது பிறவித் துன்பங்களை நீக்கும், என்று வேதங்கள் எடுத்துரைக்கின்றன. மகோத்சவ காலங்களில் மிக முக்கியமான ஒரு திருவிழாவாக தேர்த்திருவிழா அமைகின்றது. மனிதனின் தேகத்தை உருவகிக்கும் ரீதியில் தேர் அமைந்துள்ளது எனவும், அதன் சிங்காசனமே மனித இருதயத்தின் பிரதியம்சம் எனவும் கூறப்படுகின்றது. இதையன்றி பதினான்கு அண்டங்களையும் தேர் குறிப்பதாகவும் கூறுகின்றனர். சடப்பொருள்களாலான இவ் அண்டங்களை இறைவன் இயக்குவதுபோல் இறைவன் எழுந்தருளியதும் தேர் இயங்குகின்றது.

இவ்வாறு பல வகையில் தேரின் சிறப்புக்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளபோதும் எம்மத்தியில் தேர்த்திருவிழாவை சம்ஹாரத்தை (அழித்தலைக்) குறிப்பதாகவே பலரும் கருதுகிறார்கள். திரிபுர சம்ஹாரம், சூரசம்ஹாரம், இராவண சம்ஹாரம் எல்லாம் தேரில் முறையே சிவனும், முருகனும், இராமனும் எழுந்தருளி மேற்கொள்ளப்பட்ட தாகப் புராணங்கள் கூறுகின்றன. ஆனால் உற்று நோக்குமிடத்து அச் சம்ஹாரங்கள் உண்மையில் முத்தியின்பத்தையும் நல்வாழ்வையும் அளித்தனவேயன்றி அழிப்பவை யாக அமையவில்லை என்ற நிலையை உணர்தல் வேண்டும்,

தீமைதான் அழிக்கப்பட்டதேயன்றி ஆத்மா அழிக்கப்படவில்லை. அதற்குப் பதில் அவ் ஆத்மாக்கள் ஈடேற்றப்பட்ட உண்மையையே மேற்படி புராணங்கள் உணர்த்து கின்றன. தீமைகள் அழிவதைப்பற்றி கவலைப்படுவதற்கு இடமேயில்லை. அதற்குப் பதில் அதை வரவேற்பதையே நாம் விரும்புவோம்.

சிவபெருமான் நிகழ்த்திய திரிபுர சம்ஹாரத்தில் சூரிய சந்திரர் சில்லுகளாகவும் பூமியானது தேராகவும் அமைக்கப்பட்டது. அதில் முப்புரத்தரசரும் சிவலோக வாழ்வை அடைந்தனர். சூர சம்ஹாரத்தில் சூரன் தேரில் வந்த முருகனால் அழிக்கப்பட்டான் என்று கூறாமல் அவன் சேவலும் மயிலுமாக மாறி முருகன் அடியின் கீழும் கொடி யிலும் பெருவாழ்வெய்தினான் என்றே கந்தபுராணம் இயம்புகிறது.

இவ்வழியே இராவண சம்ஹாரம் கூட இராவணனின் நல்வாழ்வுக்கு வழிவகுத் ததை நம்மில் பலர் அறிந்திருக்கமாட்டார்கள். வைகுண்டத்தில் வாயில் காப்போராக இரு துவாரபாலகர்கள் நின்றார்கள். ஒரு முனிவர் ஸ்ரீ நாராயண மூர்த்தியைத் தரி சிக்கப் போனார். அப்போது அத்துவாரபாலகர்கள் முனிவரை உட்புகவிடாமல் தடுத் தனர். சினங்கொண்ட முனிவர் அவர்களைச் சபித்தார். துவாரபாலகர்கள் நாராயண னிடம் முறையிட்டார்கள். நாராயணன் ''நீங்கள் என்னைப் போற்றும் ஏழு பிறவியை அல்லது என்னைத் தூற்றும் மூன்று பிறவியைப் பெற்றபின் மீண்டும் வைகுண்டம் வருவீர்கள்'' எனச் சாபவிமோசனம் அளித்தார். அத்துவாரபாலகர்கள் நாராயணனை விரைவில் மீண்டும் வந்தடைவதற்காக அவரை வெறுக்கும் மூன்று பிறவிகளைப் பெறவே விரும்பினார்கள். அம்மூன்று பிறவிகளும் இரணியன் – இரணியாக்ஷகன், இராவணன் – கும்பகர்ணன், கம்சன் – சிசுபாலன் என்போராவர். இம்மூன்று பிறவியிலும் இவர்கள் நாராயணனை வெறுக்கும், எதிர்க்கும் தன்மையினைக் கொண்டிருந்தார்கள். இராவணன் இம் மூவரில் மிக முக்கியமானவன். இராமர் அவனைச் சம்ஹாரம் செய்து வைகுண் டத்திற்கு விரையச் செய்தார். இராவண யுத்தத்தின் போது நிலத்தில் நின்று முதலில் போரிட்ட இராமர் பின் அனுமாரின் தோளில் நின்று போரிட்டார். இதனைக் கண்ணுற்ற இந்திரன் தன் தேரையும் சாரதி மாதலியையும் இராமருக்கு அனுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தான். இந்திரனுடைய தேரில் நின்றே இராமர் இராவணனுடன் யுத்தம் செய்தார். தேரில் நின்று மேற்கொள்ளப்பட்ட சம்ஹாரங்கள் உரியவர்களுக்கு முத்தியையும் தேவர் முதலானோருக்கு நல்வாழ்வையும் கொடுப்பனவாகவே அமைந்துள்ளன.

இறைவனது இல்லமாகிய திருக்கோயிலில் இறைவன் தனது மேலான ஒளி வடிவத்தில் தோன்றி, அங்கிருக்கும் விக்கிரகத்தில் தம்மை வெளிப்படுத்தி, அங்கு உலவும் அடியாருக்கு அருள்பாலிக்க வேண்டுமுகமாக, இறைவனை வேண்டிப், பிராமணோத்தமர்கள் திருக்கோயிலின் ஆதிமூலத்தில் இறைவனுக்கு மந்திரபூசனை செய்கின்றனர்கள். மகாமண்டபம் வரை நிற்கின்ற அடியார்களுக்கு அவனது அருள் பெரிதும் கிட்டுகின்றது. எல்லோருமே அருளைப் பெறுகின்றனர். எல்லோரது பிரார்த்தனைக்கும் இறைவன் செவிசாய்க்கிறான்.

ஆனால் சிரமம், ஆசௌசம், மனப்பூசல், உலகதுன்பம், மனமாசு போன்ற காரணங்களினால் இறைவனது கோயிலினுள் சென்று அவன் அருள் பெற்று உய்வதற்குப் பின்னிற்கின்ற பல ஆத்மாக்கள் உளர். திருக்கோயிலுக்கு வெளியே வீசிக் கொண்டிருக்கின்ற இறைவனது அருள் வெள்ளத்தில் மூழ்குவதற்கு இவர்கள் சிறிது பின்னிற்பாராயினும் அவர்களும் இறையருளைப் பெறுவதற்கு உரித்துடையவராவார்.

பிராமணோத்தமர்களுடைய மந்திர உபாசனையால் ஈர்க்கப்பட்டு இறைவனும் அவனது சக்தியாகிய தேவியும் வசந்த மண்டபத்தில் இருந்து புறப்பட்டு மூர்த்திபால் தமது ஒளி வடிவினைப் பொருத்திய வண்ணம் மலர்களாலும் இரத்தின மணிகளாலும் அலங்கரிக்கப்பட்ட பொற்தேரில் ஆரோகணித்து வீதிவலம் வருவர். மூர்த்திபால் எழுந்தருளி இருக்கும் இறைவனைக் கண்டு தரிசித்து எல்லோரும் அவனருள் பெற்று உய்கின்றனர். திருத்தேர் வலம் வருகின்ற ஒவ்வொரு முறையும் நாடு நகரமென்ன இந்த உலகமே அவனால் அருள் பாலிக்கப்பட்டு நற்கதி பெறுகின்றது. எல்லோருமே அருள் பெறுகின்றார்கள். இறைவன் எல்லோருக்குமே செவி சாய்க்கிறான். திருத்தேரினை ஆக்கி அலங்கரித்து அது வலம்வரக் காரணமாயிருந்த உபயகாரர்கள், அடியார்கள், பக்தர் குழாங்களை இறைவன் வலிய வந்து ஆட்கொள்கின்றான்.

எல்லாம் வல்ல இறைவனுக்கும் அவன் சக்தியாகிய தேவிக்கும் பேரில்லமாகிய திருக்கோயில் ஆத்மீக அருள் சக்தியினை இறைவனுக்குரிய திருத்தேர் மூலம் உலகெங்கும் பரப்பிக் கொண்டிருக்கிறது. இரத்தின, மணி, புஷ்ப, பூஷித, ஸ்வர்ண வாகனமாகிய திருத்தேரின்றி அக்கோயிலினது அருங்கைங்கர்யமும் கைகூடாதென்பது உண்மையே. திருத்தேர் வீதிவலம் வருந்தோறும் வலிய வந்தாட்கொள்கின்ற இறைவனின் சக்தியினை அனைத்து உலகுக்கும் எடுத்தியம்பிக்கொண்டிருக்கின்றது.

தேரை அடிப்படையாக வைத்து பல பழமொழிகள் தோன்றியுள்ளன. "ஊர் கூடித்தானே தேரிழுக்க வேண்டும்" என்பது அவற்றுள் ஒன்று. ஆம் ஊரை ஒன்று படுத்தும் மகத்தான சாதனம் தேர். நமக்குள் இருக்கும் வேற்றுமைகளை மறந்து ஆண்டுக்கு ஒரு முறையாவது கலந்து பழகத் தேரோட்டம் வாய்ப்பளிக்கின்றது. நடைமுறையில் தேரோட்டம் பல குழப்பங்களுக்குக் காரணமாகி விடுகின்றதென்றால் அது தேரின் குறையாகாது. ஊரின் குறை; நம் உள்ளத்தின் குறை. தன் முனைப்பையும் வீண் செருக்கையும் சுயநல மனப்பான்மையையும் மாற்றிக் கொண்டால் தேரோட்டங்களை ஏன் அமைதியாக நடத்த முடியாது.

குடவாயிற் கோட்டத்தில் ஸ்ரீ விஸ்வநாதர் இம்முறை புதிய சித்திரத் தேரில் அருளாட்சி செய்ய வருகிறார்.

ஆண்டவரின் தேருக்கு வடம் பிடிப்போம்; அவர் சரணாரவிந்தத்தில் நிரந்தர இடம் பிடிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில்

# ஸ்ரீ விஸ்வநாதசுவாமி திருவூஞ்சல்

### காப்பு

சீர்பூத்த சோலைசெறிந்து ஓங்கி வைகித்
திருமகள்சேர் சுன்னாகத்து இலங்கி வைகும்
சார்பூத்த மயிலணியாம் பதியின் மேய
தகுவிசா லாட்சிவிஸ்வ நாதன் தன்மேல்
பார்பூத்த பைந்தமிழால் படியில் ஓங்கப்
பாவினத்தால் ஊஞ்சல்இசை பாடி ஏத்தக்
கார்பூத்த கருணைமதம் பொழியும் முக்கண்
கரிமுகவன் கமலபதம் காப்ப தாமே.

### ஊஞ்சல்

செய்யதிரு மேவும்மறைத் தூண்கள் நாட்டிச்
சிறப்பமரும் ஆறங்க விட்டம் நீட்டித்
துய்யபல ஆகமமாம் கயிறு பூட்டித்
துதியமரும் உபநிடதப் பலகை கூட்டிச்
செய்யும்உயர் ஊஞ்சலிடை இனிது வைகித்
திகழ்அருள்சேர் விசாலாட்சி அம்மை யோடும்
கொய்யுமலர்க் கொன்றைமதிச் சடையோ னாகிக்
குலவுவிசு வேசுரரே ஆடீர் ஊஞ்சல். 1

கந்தருவர் நாரதர்சீர் இசைகள் பாடக்
காரிகையார் இடைதுவள நடனம் ஆடச்
சந்தமொடு தும்புருநற் சதிகள் போடத்
தாபதர்கள் நாற்புறமும் சார்ந்து நாடச்
சிந்தைமகிழ் கணநாதர் இயங்கள் கூட்டத்
தெய்வவிசா லாட்சிஇடப் பாலின் ஆடக்
கொந்தலரும் மந்தார மலர்கள் சூடிக்
குலவுவிசு வேசுரரே ஆடீர் ஊஞ்சல் 2

சந்திரனும் சூரியனும் கவிகை தாங்க
தனதனொடு மாருதனும் கவரி வாங்க
இந்திரனும் மால்அயனும் இடரில் நீங்க
இயமனது வான்கரத்தில் அடைப்பை தாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துநதி இறைபுகழ்ந்து படிகம் தாங்க
தெய்வவிசா லாட்சிஇடப் பாலின் ஓங்க
கொந்தவிழும் கூவிளமோடு அனலும் தாங்கி
குலவுவிசு வேசுரரே ஆடீர் ஊஞ்சல் 3

அந்தணர்கள் நின்ஒளிர்கொள் தீபம் காட்ட
அகத்தொண்டர் இடையிடையே தலைகள் நீட்ட
சந்திரனும் சொல்லரசும் மாலை சூட்ட
தகும்உலகத்து அடியார்கள் துதிகள் கட்ட
சந்ததமும் மேற்றிசையாம் வாயில் காட்டி
சாரும்விசா லாட்சிஇடப் பாலில் கூட்டி
கொந்தவிழும் மயிலணியாம் கோவில் மேவி
குலவுவிசு வேசுரரே ஆடீர் ஊஞ்சல். 4

சுந்தரம்சேர் கயிலைமலைக் கோயில் போல
சுன்னுகத்து அணிதிகழும் கோவில் மேவி
சந்ததமும் கவுணியர்தம் குலத்தோர் போற்ற
சாரினிலே விநாயகனும் கந்த வேளும்
புந்தியிலே மகிழ்வுடனே புகழ்ந்து நிற்ப
பரசிவையாம் விசாலாட்சி பாலின் ஓங்க
நந்திமுழவு ஒலித்திடவே நடன மாடும்
நாதவிசு வேசுரரே ஆடீர் ஊஞ்சல். 5

பார்புகழும் சுன்னுகப் பதியில் மேவும்
பைந்தமிழ்சேர் மயிலணியாம் கோவில் தன்னில்
சீர்திகழும் கார்த்திகேயக் குருவின் பின்னோர்
சிறப்புடனே வழிவழியாய் அருச்சித் தேத்த
கார்மருவும் கூவிழநல் நிழலில் மேவி
கருதும்அடி யார்இடர்கள் களைந்து நாளும்
தாரணிசூழ் குடவாயிற் கோட்டம் தன்னில்
தவம்அருள் விசுவேசுரரே ஆடீர் ஊஞ்சல். 6

தாரணியில் எமதிடர்கள் எல்லாம் மாய
சந்ததமூர் திருஉளத்தில் அன்பு பாய
காரணியும் வயல்களொடு சோலை சூழும்
கற்பகத்தை ஒத்தபல கதலி மேவி
சீரணியும் பல்லுயிர்கள் இன்பம் மேவ
தெய்வவிசா லாட்சிஇடப் பாலின் மேவ
கூரணியும் முக்கருவார் சூலம் ஏந்தி
குலவுவிசு வேசுரரே ஆடீர் ஊஞ்சல். 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்திருவாழ் மணிமார்பன் ஆதி தேவத்
திருக்குழாம் மந்தார மலர்கள் தூவ
இந்திரியவழி இலங்காதி தேய மேவ
இயற்புலவர் மதுரகவி கூறி மேவ
அந்திரைபோல் வெள்ஒலியல் அசைய எங்கும்
அன்பர்திரு நாமம்எடுத்து அன்பிற் கூற
சுந்தரம்சேர் விசாலாட்சிஇடப் பாலின் மேவ
சுகம்அருள் விசுவேசுரரே ஆடீர் ஊஞ்சல். 8

மேவுசடைப் பிறைமிளிரப் பாம்பு மின்ன
மென்முறுவல் இளநிலவு விரிந்து மின்ன
தூவியலும் மழுமின்னத் தோடு மின்ன
துதியமரும் மான்கன்று துளங்கி மின்ன
மாவியலும் புயத்துமணி வலயம் மின்ன
மார்பில்உப வீதமுடன் வரதம் மின்ன
ஆவியலும் விசாலாட்சி அமர்ந்து மின்ன
அருள்புரி விசுவேசுரரே ஆடீர் ஊஞ்சல். 9

மிண்டிவரும் கருநஞ்சை உண்டு முன்னுள்
விண்ணவரைக் காத்தவரே ஆடீர் ஊஞ்சல்
குண்டிகைகொள் குடமுனியைத் தென்பாற் போக்கி
கோலமருள் சற்குருவே ஆடீர் ஊஞ்சல்
செண்டணைய தெய்வவிசா லாட்சி அம்மை
சேர்மரும நாயகரே ஆடீர் ஊஞ்சல்
கொண்டல்துயில் மயிலணியாம் கோவில் மேவி
குலவுவிசு வேசுரரே ஆடீர் ஊஞ்சல். 10

## வாழி

வான்முகில்கள் மும்மாரி பெய்து வாழி
மறையோடு தவம்வேள்வி தாமும் வாழி
கோன்கோலும் அதனோடு குடியும் வாழி
கோதகலும் அந்தணரும் மன்னி வாழி
தேன்மொழியார் தம்கற்பு நெறியும் வாழி
தினந்தோறும் விசாலாட்சி சிறந்து வாழி
கூன்மதியார் மயிலணியாம் கோவில் வாழி
குலவுவிசு வேசுரரும் வாழி வாழி.

சுபம்

2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**மயிலணி**

# விசாலாட்சி அம்மை பதிகம்

**விநாயக வணக்கம்**

உலகெலா மொன்று வொன்று யொன்றியு நிற்ப தொன்றய்
இலகுவ தெதுவோ வன்ன தெமக்கிறை யதற்கு லீலை
பலவுள வவற்று ளொன்றய்ப் பணிந்தவர்க் கின்பம் பூக்குந்
திலகமா யாணை யான செய்தியைச் சிந்தை செய்வாம்.

**நூல்**

பூமேவு கொன்றையொடு திங்களணி மகுடமும்,
புதியதள வணையமூரற்
பொற்புமிகு விற்புருவ வழகுமுக் கண்களின்
பொலிவுமதி நுதலினெழிலுந்
தூமேவு கொவ்வையங் கனியைநிக ரிதரெளித்
தொன்மையும், நுதலிலிட்ட
சுந்தர மிகுத்தகுங் குமதிலக சேர்வையுந்,
தோன்றிய முகக்கருணையும்,
மாமேவு பசியமர கதநீல வண்ணமென
வாய்த்ததிரு வடிவுமாயென்
மனமலரும் விழிமலரு மிகமலர வெதிராகி
வந்துநற் காட்சிதருவாய்!
ஏமேவு கண்ணியே! உலகெலாம் ஈன்றருளும்
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே!

அந்திமதி புனைவேணி யமலனோ டபேதமாய்
அமருவாய் அகிலநடவ!
ஆரருளி னவனையா ளுகவும் நின்னையவன்
அன்புடன் மகிழ்ந்து வேட்கும்
பைந்தொடி ஒருத்தியென் றுகவுஞ் செய்தவன்
பாகத் தமர்ந்துவைகிப்
பாராதி அண்டப் பரப்பெலா நொடியினிற்
பண்புட னமைத்தருளுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவித மாகநீ தந்தருளும் விளையாடல்
எத்தனை யெனப்படுபவோ ?
ஏகாந்த நின்றுணரு வாருணர்வ தன்றியிதை
என்போலு வாருணர்வரோ?
இந்தனைய நுதலியே! வந்தனைசெய் வார்க்கருளும்
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே!

திக்குமுக மாயினேன் மாதர்மூ வரைமணஞ்,
செய்துவாழ் கின்றசீருஞ்
செந்திருவை அம்புவி மடந்தையை மணந்தரி
திரைகடல் படுக்கும்வாழ்வும்,
மைக்கறை மிடற்றினே னந்தொழி னடாத்தியவ்
வானோர்கண் மகுடசூடா
மணியாகி அணியாய கயிலாச பதியாகி
வாழ்வுபெறு மப்பெருமையும்,
கைக்கிளி தரித்தன்ன மூர்ந்துவரு கண்ணிநின்
கண்ணினரு ளில்லையென்னிற்
கணமெனினு நிற்குமோ? இவ்வுலகெ லாநினது
கருணைவடி வென்றுகாண்,
இக்கனைய சொல்லியே நற்பெருமை தந்தருள்க,
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாழ்
எழில்விசா லாட்சியுமையே!

தந்தையொடு தாயென்ன வந்தவிவர் தந்ததென்
சகசரென வந்துதித்தோர்
தாமெனக் குதவியதென் மகவினொடு தாரமுஞ்
சஞ்சலந் தந்தவன்றி
வந்தவோ ரின்பமெட் டுணையும்யா னறிகிலேன்
மற்றவர் தமக்கின்பமாய்
வந்திடுவ தேதுலக மிந்தவித மாய்மாய
வைத்திடுவ தன்றியொன்றைச்
சிந்தைசெய விடுவதில முந்தைவினை யாலீது
தீர்வையு மேதுமில்லை,
திருகா திருந்துமன முருகா நினைந்துனைச்
சேவிப்ப தெந்தவிதமோ?
எந்தவடி வும்உனது வடிவமெனு நினைவருள்க
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே!

4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பொருளி லாசையோ ரெட்டுணையு மறிகிலேன்
காணியிஃ தெனதிடமெனுங்
கவலையுங் காண்கிலேன், அவலமாய் மகளிரைக்
காண்டொறும் நெஞ்சமென்னும்
பொய்ப்பிசா சஞ்சுழன் றுழியாம லவர்தமது
பூரித்த கும்பமுலையிற்
புரணவை வேல்விழியி னிற்கிரண முகமதிப்
பொலிவினிற் சொல்லினல்குன்
மைப்படியும் வேலையிற் கைப்பதும வீச்சின்மேல்
மருவுமொரு துரிதநடையின்
மயலுறு வுலையுமிஃ தியல்பென்ப தமையுமோ?
வரைவுசெய் தாரிருக்க
எப்படியு மிதுதொலைய நீயருள வருகுவாய்!
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே! 5

கண்ணாகி நின்றுருவு காண்பதுவு நீ;உடற்
கற்பிதம தாயிருந்து
கடுகுமூ ருதிகளை உணர்வதுந் நீ;மணிற்
கந்தமறி நாசியுநீ ;
பண்ணாதி ஓசையைக் கவர்செவியு நீ;இரச
பக்குவம் பார்ப்பதும்நீ ;
பற்றியிவ் வைந்தின்வழி உற்றுநின் றுழன்மனப்
படிவமுந் நீகொலென்றுற்
பண்ணாதி மூன்றின்வரு பயனுமறி வன்கொலோ?
பெற்றியிவ் வாறிருக்கப்
பிழைகள்செய் தனனென்று துயர்வதுந் நன்மையிற்
பெரியனெனு மகிழ்வுமருவி
எண்ணாத எண்ணங்கள் எண்ணாமல் அருளுவாய்!
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே! 6

நன்றுதீ தென்றுலகி லெண்ணியே மையலுறு
நாடகமென் யானறிகிலேன்,
நம்மைவை தாலுமவ் வைவிலுறு பயன்யாது?
நண்ணிப் புகழ்ந்தாலுமென்?
துன்றுசுவை நாவன்றி மட்கலமு மறியுமோ?
தோகைநீ யலதுமனுடத்
தொகுதிகளு மறியுமோ? ஒருவனுள் ளத்தினுள்
தொக்கவப் பக்குவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்றையுண ராமலே வைதாரை நொந்துமிசை
பேசினரின் மகிழ்வாகியும்
பேதிலுலே வன்கொலோ? வீதிவந் தென்னுளம்
பேதைநீ குடியிருக்க
என்றுமெவ் விடமுமெப் பொருள்வரினு மெனதெனேன்
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே. 7

ஆரெனக் கென்செய்வ ரஃதன்றி அவர்தமக்(கு)
அடியேனும என்னசெய்வேன்?
அறமென்ப தார்வழிய! தல்லாமை யார்வழிய?
தாயினின் வழியவன்றோ?
சீரெனக் கண்டறஞ் செய்தே னியானென்று
செப்புவா ரலதுதீமை
செய்தே னியானென்று சொல்லுவா ரலதுபிறர்
செய்ததென வவர்கள்யாவர்?
நீரெனக் கடலெனப் பிறிதாகு மோவிந்த
நிலைமையை நுனித்துநோக்கி
நின்றநிலை தவருமல் நின்றபடி யாகியே
நின்றுருக நீயருளுவாய்!
ஏரெனக் கண்டதொன் றேனுமிப் புவியில்லை
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே. 8

இச்சித்த படிநன்மை தீமைகள் புரிந்திடற்(கு)
எய்துமோ? அஃதில்லையே!
இல்லையெனில் வல்லபங் கொண்டவை களைத்தள்ள
ஏலுமோ? அதுவுமில்லை
இச்சையிஃ திவ்வா றிருத்தலிற் றீமைகளை
விட்டுவிட வேண்டுமென்னும்
விதிருநன் மைகள்செய்ய வேண்டுமெனு மாசையு
மேவிலேன் வந்தவெல்லாம்
அச்சமகிழ் வின்றியே நினதருளை மறவாமல்
அனுபவித் தேதொலைப்பேன்
அறிவின்மை கொண்டுபலர் குறைநிறைகள் பேசலுக்
கசைவனோ? உலகுயிரெலாம்?
எச்சமென அருள்கின்ற தாயாகி வந்திடுமோர்
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழின்வழி வருபவரு முறுவோரும் இதனைவெலல்
ஒல்லுமோ கல்வியில்லார்
ஒருவரிடர் உயர்வுகளின் இகழ்புகழ் புரீஇப்பிறப்
பொன்றிலே பயனுய்குவார்
காழின்வழி மரமுமதன் வழியினிற் கனியுமே
காணுமல் லாதுபிறழா
கன்மம் புசிக்குநாட் சென்மமிஃ திற்செயல்
கலப்பதிலை போகமாகப்
பாழினெழு நயமீது முனிவர்சின மகிழ்வினிற்
பார்த்திலே மென்னிறுங்கும்
பார்க்கலா முன்பினு யினமோக மொழியீது
பண்பிதிவ் வாறிருக்க
ஏழினெழு மிவ்வுடற் கஞ்சுகோ? தஞ்சநீ
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே ! 10

## வாழி

செம்மையா மறைமுடிவின் துணிபு வாழி,
திரிசயந்தீர்ந் தொன்றுமெய்ச் செல்வம் வாழி,
தம்மையறிந் தவருயர்ந்தோர் சங்கம் வாழி,
சார்ந்தவரை ஒழுகுபவர் தாமும் வாழி,
நம்மையா ரெனவறிய நமக்கு நன்மை
நல்கிமயி லணிப்பதிவாழ் நம்பன் பாங்கர்
அம்மைவிசா லாட்சியுமை யருளா னுளும்
அத்தலமும் மறையவரும் வாழி, வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# துதிப் பாடல்கள்

உலகெ லாமுணர்ந் தேத்திடும் தூயவன்
உலகெ லாமுணர்ந் தேதமை யெய்திட
அலகி லாநட னஞ்செய்யு மந்தணன்
அலகி லாப்புகழ் பாடிப் பரவுவாம்.

**வேறு**

திருக்குட வாயிற் கோட்டம் திகழ்ந்திடும் தேவே போற்றி
அருட்பெருங் குணத்தாய் போற்றி யம்மையோர் பாகா போற்றி
இருட்பெருந் துன்பம் நீங்கி உலகெலா முய்ய வெள்ளிப்
பொருப்பிடை யாடு கின்ற புண்ணியா போற்றி போற்றி.

அத்தனே போற்றி எங்கள் ஆதியே போற்றி மேலாம்
சுத்தனே போற்றி வேற்கைத் தூயவன் தொழுது போற்றும்
நித்தனே போற்றி வெள்ளிக் கிரியுறை நிமலா போற்றி
தத்துவங் கடந்த ஞாலத் தளிரொளிப் பிளம்பே போற்றி.

தசமுகன் துதிகள் செய்யத் தண்ணளி புரிந்தாய் போற்றி
திசைமுகன் மாலோன் காணச் சோதியாய் நின்றாய் போற்றி
தசையிலா முனிவற் கூன்று கோல்கொடுத் தருள்வாய் போற்றி
விசயவெள் ளேற்றின் மேவும் வெள்ளிவேற் பரசே போற்றி.

விடைமுகன் முழவ திர்ப்ப விராவணன் புகழ்ந்து பாட
புடைதனிற் கணேச னோடு புகழ்மிகு முருக வேளும்
அடைந்தனர் வழிபா டாற்ற வம்மைகைத் தாளம் போட
நடமிடு மரசே யெங்கள் நாதனே போற்றி போற்றி.

**வேறு**

சீர்மேவும் சுன்னைகப் பதியில் வாழும்
செல்வமலி குடவாயிற் கோட்டம் மேவும்
பார்முதலாம் பஞ்சபூ தங்கள் சூழும்
பகரரிய பெருமைமிகும் தேவ தேவே
கார்மருவும் சோலைகளிற் குயில்கள் கூவ
கண்களிப்ப வணியணியாய் மயில்க ளாட
சூர் தடிந்த மாவீரன் செவ்வேள் போற்ற
சுரர் துதிப்ப நடனமிடும் செல்வா வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆலய விசேஷ உத்சவங்கள்

**சித்திரை :**

மேஷ சங்கிராந்தி பூசை
நடேசரபிஷேகம்
திருநாவுக்கரசர் குருபூசை

**வைகாசி :**

மஹோத்சவம் (10 தினங்கள்)
திருக்கல்யாண உத்சவம்
திருஞானசம்பந்தர் குருபூஜை

**ஆனி :**

ஆனி உத்தரம்
ஷண்முகர் அபிஷேகதினம்
மணிவாசகர் குருபூஜை

**ஆடி :**

ஆடிப் பூரம்
சுந்தரர் குருபூசை

**ஆவணி :**

ஆவணிமூலம்
நடேசரபிஷேகம்
விநாயக சதுர்த்தி
வரலக்ஷ்மி விரதம்

**புரட்டாதி :**

நடேசரபிஷேகம்
லக்ஷார்ச்சனை
நவராத்திரி
மானம்பூ
காமேஸ்வரி பூஜை

**ஐப்பசி :**

அன்னபிஷேகம்
தீபாவளி

**கார்த்திகை :**

சோமவாரம்
திருக்கார்த்திகை

**மார்கழி :**

திருவெம்பாவை
விநாயக ஷஷ்டி

**தை :**

மகர சங்கிராந்தி பூஜை
தைப்பூசம்

**மாசி :**

மஹா சிவராத்திரி
நடேசரபிஷேகம்

**பங்குனி :**

வருஷாபிஷேகம்
(சஹஸ்ர சங்காபிஷேகம்)
பங்குனி உத்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

★ "தேர்த் திருவிழா மலர்" மிகவும் சிறப்புற மலர வாழ்த்துச் செய்தி வழங்கிய மாவை ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களுக்கும்,

★ இம் மலருக்கு தமது ஆக்கங்களைத் தந்து சிறப்பித்ததுடன் தகுந்த ஆலோசனைகளையும் வழங்கி எம்மை உற்சாகப் படுத்திய பெரியோருக்கும்,

★ மலரை வெளியிடப் போதிய நிதியுதவியைத் தந்த வர்த்தகப் பெருமக்களுக்கும்,

★ குறித்த வேளையில் சிறந்தமுறையில் இம் மலரைப் பதித்துத்தந்த திருமகள் அழுத்தக உரிமையாளருக்கும், ஏனைய ஊழியர்களுக்கும்

எமது மனம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக!

மயிலணி
சுன்னாகம்

மலர் வெளியீட்டுக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கோ (B) திரை அரங்கு

புதிய

**தமிழ், ஆங்கில, ஹிந்தி**

திரைப்படங்களைச் சிறந்தமுறையில்

**அகலத் திரையில்**

**கண்டு களியுங்கள்.**

# இளங்கோ (B) திரை அரங்கு

கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.



**நம் வாழ்த்துக்கள்!**

எம்மிடம் சகலவிதமான அன்பளிப்புப் பொருட்களும்,

எவர்சில்வர் பொருட்களும்

நிதானமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

# புவனு றேடர்ஸ்

கே. கே. எஸ். வீதி, சுன்னுகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துகிறோம்!

DEALER FOR :

- Office & Safety Steel Equipment
- Fire Protection Equipment

# THIRU SENTHURAN TRADING COMPANY

163 (315), K. K. S. ROAD,
JAFFNA.

கோவில் பாவனைக்கான மணிவகைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.



ரதமேறும் பெருமானின் நல்லருளை வேண்டுவோம்!

உங்கள் அன்றாடப் பாவனைக்குரிய

*பலசரக்குச் சாமான்களை*

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# கிருஷ்ணு ஸ்ரோர்ஸ்

மயிலணி :: சுன்னுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துக்கள் !

DEALERS IN:

- TEXTILES
- FANCY GOODS
- FISHING EQuIPMENTS

# MANIAMS

15, Jubilee Bazaar,
JAFFNA.

16, People's Model Market,
JAFFNA.

வாழ்த்துக்கள்!

அலங்காரப் பொருட்கள்

கேக் ஐசிங் பொருட்கள்

போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

# Sri Sai Stores

141, MODERN MARKET,

Hospital Road : JAFFNA

PHONE: 660


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹப்பி எலக்றிக்கல்ஸ்

எம்மிடத்தில் சகலவிதமான மின்சார உபகரணப் பொருட்களும்,
சைக்கிள் உதிரிப் பாகங்களும் மலிவான விலையில்
தரமானவையாகப் பெற்றுக்கொள்ளலாம்.

மின்சாரவேலை, மோட்டர்வேலை
குறித்த தவணையில் சகாயவிலையில்
ஒப்பந்தத்திற்குச் செய்து கொடுக்கப்படும்

# Happy Electricals

**K. K. S. ROAD : CHUNNAKAM**

சுன்னுகத்தில்
நெல்லுக் குற்றல்
கோப்பி, மிளகாய் திரித்தல்
மாவரைத்தல்
என்பவற்றிற்குப் பிரசித்திபெற்ற மில்

# இரத்தினம் மில்ஸ்

அரிசியை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
எம்மை நாடுங்கள்
உங்கள் தேவையே எங்கள் சேவை.

உரிமையாளர்: சி. இராசரத்தினம்
ஸ்ரேசன் ரேட், சுன்னுகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான நைலோன் வலைகளும்
மற்றும் மீன்பிடி உபகரணங்களும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்

# நித்தியா ஸ்ரோர்ஸ்

இல. 9, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி 24022

வாழ்த்துக்கள்!

நியாய விலையில்
தரமான இரும்புப் பொருட்கள்
S-Lon பைப் வகைகளுக்கு
நாடவேண்டிய ஸ்தாபனம்

# EESWARY HARDWARE STORE

K. K. S. ROAD, CHUNNAKAM
Prop. K. Ponnuthurai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெயரூம்ஸ்

ய

கௌ

ரி

நவநாகரீக புடைவைகட்கும்
மற்றும் கூறைச் சேலை
வகைகட்கும்
சிறந்த ஸ்தாபனம்

# JEYA GOWRY

**5, NEW MARKET, CHUNNAKAM**

கோயில் அபிஷேகங்கள்
திருவிழாக்கள்
புதுமனைப் பிரவேசம்
புதுமனைக்கு அத்திவாரமிடல்
முதலிய வைபவங்கட்கு வேண்டிய அபிஷேகத் திரவியங்கட்கும் மற்றும் சித்த ஆயுர்வேத மருந்து வகைகட்கும் நாடுங்கள்

# ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி, சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Shakkra Pharmacy

**23, K. K. S. ROAD, CHUNNAKAM**

உள்நாட்டு வெளிநாட்டு ஆங்கில மருந்துவகைகள்
பால்மா வகைகள்
விற்றமின் ரொனிக் வகைகள்
சில்லறையாகவும் மொத்தமாகவும் வாங்க
நாடவேண்டிய ஸ்தாபனம்

## சக்ரா பாமசி

கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

இலவச வைத்திய ஆலோசனைகள் அளிக்கப்படும்.



வாழ்த்துக்கள்!

தரமான
கறுப்பு வெள்ளை
கலர்
படப்பிடிப்பில் 35 வருட கால
அனுபவம் பெற்றவர்கள்

# PRINCE STUDIO

**K. K. S. ROAD, CHUNNAKAM.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலன் ஸ்ரோர்ஸ்

மக்களின் அன்றுட பாவனைப பொருட்களின்
விற்பனையில் முன்னணி வகிப்பவர்கள்

தரமான பொருள் நியாய விலை

நீங்கள் நாடவேண்டிய இடம்

# பாலன் ஸ்ரோர்ஸ்

191, கே. கே, எஸ். வீதி, சுன்னுகம்

(மொத்த சில்லறை விற்பனையில் முன்னணி வகிப்பவர்கள்)

# VINYL'S INSTITUTE

**K. K. S. ROAD, CHUNNAKAM.**

கலை
வர்த்தக
விஞ்ஞான வகுப்புகளும்
6, 7, 8, 9, O/L பகல் நேர வகுப்புகளும்
Spoken English வகுப்புகளும்
நடைபெறுகின்றன.

N. யோகராஜா
நிர்வாகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான நைலோன் வலைகளும்
மற்றும் மீன்பிடி உபகரணங்களும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்

# JAFFNA FISHING NYLON CENTRE

**33, NEW WEST MARKET, JAFFNA.**

பெண்மணிகளே !

உங்களுக்குத் தேவையான
பாதணிகள்
அலங்காரப் பொருட்கள்
அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

# SIVANATHAN'S

**159, NEW MARKET, JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துக்கள்!

உங்களுக்குத் தேவையான
நைலோன் வகைகளுக்கும்
மற்றும் மீன்பிடி உபகரணங்கட்கும்
நாடுங்கள்

## சமுத்திரா றேட்ஸ்

46, மொடர்ன் மாக்கற், யாழ்ப்பாணம்.



## செல்வன்

### வீடியோ & போட்டோ

தொடர்பு கொள்ளுங்கள் :

| A. T. Thiruchelvam | P. Karunanithy |
|---|---|
| **Moorthavinayagar Kovilady,** | **No. 976, Nachchimar Kovilady,** |
| **ANAICODDAI** | **K. K. S. ROAD JAFFNA** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைலோன் வலைகளுக்கும்
அனைத்து மீன்பிடி உபகரணங்களுக்கும்

நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

# RAJAH STORES

**36, MUNEESWARAN ROAD.**
**JAFFNA.**



## வாழ்த்துக்கள்!

உங்களுக்குத் தேவையான
சகலவிதமான மீன்பிடி உபகரணங்களுக்கும்
நைலோன் வகைகளுக்கும்
நாடுங்கள்

# ஓஷன் ட்ரேட்ஸ்

11/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரத் தேரில் வலம்வரும் சிதம்பரேஸ்வரர்
அனைவருக்கும் நல்லருள் புரிவாராக!

Diploma in
Computer Programming Course

• BASIC • COBOL • PASCAL

Languages

and

Lotus 1, 2, 3

Word Processing

DBase III +/ IV.

Conducted by:

**ABLE TECHNICAL STUDIES**

K. K. S. Road,
JAFFNA.

Post Office Road,
CHAVAKACHCHERI

(எதிர்காலம் கம்பியூட்டரின் கைகளில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்—152/5-89

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org